24th December 1956]

Sri V. BALAKRISHNAN : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின் போது இதைப்பற்றி நான் சொல்ல வேண்டிய விஷயங்களை யெல்லாம் மந்திரி அவர்களுக்கு சொல்லுவதற்கு அவகாசமில்லை. இதனால் சர்க்காருக்கு ரூபாய் இரண்டு அல்லது மூன்று லட்சம் நஷ்டம் ஏற்படுமாதலால், இது சம்பந்தமாக நுணுக்கமாக சர்ச்சை செய்வதற்கு ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு மந்திரி அவர்கள் களிகூர்ந்து ஒத்துக்கொள்வார்களா ?

DEPUTY SPEAKER : What has the Hon. Revenue Minister to say regarding this?

Sri K. VINAYAKAM : இப்பொழுது ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் சிலோனிலிருந்துவரும் அகதிகளுக்கு எவ்வித சலுகையும் அளிக்கக்கூடாது, அவர்களையும் இங்கிருக்கும் மக்கள் போலவே நடத்தவேண்டுமென்ற அடிப்படையிலே அவர் எண்ணுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், சர்ச்சைக்கு அரை மணி நேரம் ஒதுக்குவதற்கு முன்பே.

The Hon. Sri M. A. MANICKAVELU : இது பற்றி நான் நுணுக்கமாக ஆராயப்போவதால், அதை ஒட்டி இப்பொழுது அரை மணி நேரம் விவாதம் அவசியமில்லை. அது வீண் காலம் கழிப்பதுதான்.

DEPUTY SPEAKER : We have got the Appropriation Bill which is coming up for discussion day after to-morrow and the hon. Member can raise this question then. There is no need for a half-hour debate. Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following message, dated the 16th December and 20th December 1956, received from the Governor of Madras :—

1. "In spursuance of Article 207, Clause (1) read with Article 199, clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Tobacco (Taxation of Sales and Registration) (Amendment) Bill, 1956.'

2. In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Official Language Bill, 1956.'

(2) MESSAGE FROM THE COUNCIL.

DEPUTY SPEAKER : I have also to announce to the House that I have received the following messages, dated 22nd December 1956, from the Hon. Chairman, Madras Legislative Council :—

1. " In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 34 of 1956), as passed and agreed to by the Council on the 22nd December 1956 without any amendment and signed by me.

[Deputy Speaker] [24th December 1956

2. In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956 (L.A. Bill No. 35 of 1956), as passed and agreed to by the Council on the 22nd December 1956 without any amendment and signed by me."

III.—GENERAL DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1956–57.

DEPUTY SPEAKER: Now we will take up the general discussion on the Final Supplementary Statement of Expenditure for 1956–57.

10 a.m. **Sri K. T. RAJU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உப மானிய கோரிக்கையின் விவாதத்திலே சில விஷயங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய கோவை மாவட்டத்தில் பரம்பிகுள திட்ட சம்பந்தமாக ஏற்கெனவே கேரள ராஜ்யத்தோடு நாம் நடத்திய பேச்சு வார்த்தை எந்த அளவில் இருக்கிறது? அவர்கள் நம்முடைய சென்னை ராஜ்யத்தோடு ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாதுபோனால், நம் முடைய ராஜ்யத்திலேயே வேறு முறையில் திட்டம் வகுத்து கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ஏகராவுக்கு பாசன வசதி செய்வதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தியில் படித்தேன். ஆகவே நம் என்ஜினியர்கள் கொடுத்திருக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறை யில் கொண்டு வருவதற்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் என்ற விவரத்தையும் சபையில் அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளுவது நல்லது. கனம் அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது இது விஷயமாகவும் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தப்படியாக, சிறு தொழிலாளர்களுக்கு குடிசைத்தொழில் ஆரம் பிப்பதற்கு வேண்டிய வசதி செய்துகொடுப்பதற்கு இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும், கிராமம் தோறும் ஆயிரம் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு தேடிக்கொடுப்பதற்கு இது உதவிகரமாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் எதிர்ப்பார்த்த அளவுக்கு நடைமுறையில் துரிதமாக நடை பெறவில்லை. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் குடிசைத் தொழில் ஆரம் பிப்பதற்கு ஸ்தல அதிகாரிகள் தூண்டுதலின் பேரிலும் நாங்கள் செய்த முயற்சியினாலும் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கு தொழிலா ளர்கள் அவர்கள் கொடுக்க வேண்டிய பங்கை பாங்குகளில் 'டெபாசிட்' செய்திருக்கிறார்கள். ஒன்றரை வருஷங்கள் ஆகியும் இன்னமும் தொழில் ஆரம்பிக்கப்படவில்லை. சாதாரண தொழிலாளர்கள் அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தை அதிக வட்டிக்கு கடன் வாங்கி தொழிலை எப்படி யாவது ஆரம்பிக்கவேண்டுமென்ற ஆர்வத்தில் கட்டியிருக்கிறார்கள். அதி காரிகளும் நாங்களும் செய்த சிபார்சுக்கிணங்க இவர்கள் தொழிலை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். பணம் கட்டியும் தொழில் ஆரம் பிப்பதில் இப்படிக் காலதாமதமாவதால் தொழிலில் ஈடுபட்டவர்கள் உற் சாகத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தொழி லில் ஒரு ஆர்வமும் ஆசையும் ஏற்படவேண்டுமானால், குடிசைத் தொழில் களை துரிதமாக ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு தொழிலின்மேல் இருக் கும்படியான பற்று அற்றுப்போய் அவர்கள் சோர்வு அடையக்கூடிய நிலை மைதான் ஏற்படும். இந்த விஷயத்தில் சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிசைத் தொ ழில்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமென்று நினைத்தால் மட்டும் போதாது. தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவி அளிப்பதற்கு பணம் ஒதுக்கியிருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறையில் அமுலுக்குக்